**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1131/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.2
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | தீபா | -- | |
| Father's Name | இராதாகிருஷ்ணன் | Calling | துணை இயக்குநர் –I |
| Village | கோவில்பட்டி | Religion | |
| Taluk | கோவில்பட்டி | Age | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையின் துணை இயக்குநர் –I ஆக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி அதே துறையில் அ.சா,1 அஜித்குமார் என்பவர் உதவி இயக்குநர்–III ஆக பணிபுரிந்து வருகிறார். கடந்த 08.08.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சல்வார்பட்டி கிராமம், கதவு எண். 1/512 என்ற முகவரியில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பட்டாசு தொழிற்சாலையில் 07.08.2024 ம் தேதியன்று பிற்பகல் 03.45 மணியளவில் நிகழ்ந்த தீ விபத்து சம்மந்தமாக நானும், என்னுடன் மேற்படி அ.சா.1 அஜித்குமார், உதவி இயக்குநர்–II இசக்கி ராஜா ஆகியோருடன் குழு ஆய்விற்கு மேற்படி பட்டாசு தொழிற்சாலைக்குச் சென்றோம். மேற்படி தொழிற்சாலையில் 07.08.2024 ம் தேதியன்று தொழிற்சாலையில் மிக்ஸிங் மற்றும் பில்லிங் பிரிவில் பணிபுரிந்த திரு.முத்துகிருஷ்ணன் என்பவர் பிற்பகல் 03.00 மணியளவில் பணி முடியும் தருவாயில் தொழிற்சாலையில் எஞ்சியிருந்த வேதி மருந்துகலவையின் கழிவுகள் மற்றும் தொழிற்சாலையில் உற்பத்தி கழிவுகளை எடுத்துக்கொண்டு தொழிற்சாலைக்கு வெளியே சுமார் 1 1/2 கி.மீ தொலைவில் இருந்த கழிவுக் குழியில் மேற்படி கழிவுகளை எரிப்பதற்காக தொழிற்சாலையில் பொலிரோ பிக்கப் என்ற வாகனத்தில் எடுத்துச்சென்று மேற்படி கழிவுகுழியில் கொட்டியுள்ளார். கழிவுகள் எரிப்பதற்கு திரி அமைத்துவிட்டு தனது நண்பர்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அருகிலுள்ள ஆற்றில் குளிக்க வருமாறு தெரிவித்துள்ளார். நண்பர்கள் வரவே ஆற்றில் குளித்துவிட்டு வந்து சுமார் 03.45 மணியளவில் குழியில் கொட்டிய கழிவுகள் எரிந்து விட்டதா என பார்ப்பதற்கு தான் மட்டும் சென்றுள்ளார். காற்றின் வேகம் அதிகமாக இருந்த காரணத்தினால் குழியில் இருந்த பட்டாசுகழிவுகள் ஒரே நேரத்தில் தீப்பிடித்து

எரிந்துள்ளது. அச்சமயத்தில் அங்கு நின்றிருந்த மேற்படி முத்துகிருஷ்ணன் மீது தீ ஜீவாலைகள் பட்டதில் அவருக்கு தீக்காயம் ஏற்பட்டுள்ளது. அவர் அலறிய சத்தம் கேட்டு அருகிலிருந்த அவர் நண்பர்கள் அவரை மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர் என்ற விபரம் எங்களுக்கு ஆய்வின் போது எங்களுக்குத் தெரியவந்தது. அதன் பிறகு நான் எனது அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். இது சம்மந்தமாக அ.சா.1 அஜித்குமார் அவர்கள் சட்டமுறைப்படியான மேல் நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**